கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை... முதல் பக்கத் தொடர்ச்சி

'ஆளும்கட்சிக்கு வாக்களிக்கா விட்டால் தொகுதிக்கு எதையும் செய்யமாட்டோம்' என பிளாக்மெயில் செய்து வாக்கு வாங்க வேண்டிய நிலைக்குத் தள் ளப்பட்டார்கள். அரசு ஊழியர்க ளையும் வாக்குப்பதிவின்போது மிரட்டி ஆதரவாகப் பணியாற்ற வைத்தார்கள். 'சூரியனுக்கு வாக்க ளிக்கச் சொன்னால் விசிலுக்கு அழுத்தச் சொன்னார்கள்' என்று ஒரு மூதாட்டி வெளிப்படையாகப் பேட்டியே அளித்தார்.

இப்படி, தன் அதிகார பலம் முழு வதையும் இடைத்தேர்தலுக்காகத் தவறாகப் பயன்படுத்தியது த.வெ.க. அரசு.

நான்கே மாதங்களில் கிழிந்து தொங்கிய பிம்பம்!

5 நிமிடப் பேச்சிலேயே அனைத் தையும் விஜய் மாற்றிவிடுவார் எனக் கட்டமைக்கப்பட்ட போலி பிம் பம் நான்கே மாதங்களில் கிழிந்து தொங்கிவிட்டது. ஆட்சிக்கு வந்த இத்தனை குறுகிய காலத்தில் இப் படி ஒரு சரிவு எந்த முதலமைச்ச ருக்கும் இதுவரை ஏற்பட்டதில்லை.

கல்லாப்பெட்டிக் கூட்டணிக் கட்சிகள் என விமர்சித்த கட்சி களையே, இப்போது தன்னோடு இணைத்துக்கொண்டு தேர்தலைச் சந்தித்த நிலையிலும், அனைத்தை யும் மீறி, 'எப்படியாவது வெற்றி பெற் றால் போதும்' என்ற மனநிலைக்கு அவர்களைத் தள்ளும் வகையில் தான் இடைத்தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன.

என்ன செய்தும், தி.மு.க. மீதான மக்களின் நம்பிக்கையை எதுவும் செய்ய முடியவில்லை. தி.மு.க.வை மட்டுமே குறிவைத்துப் பேசினார் முதல மைச்சர். ஆனால், தி.மு.க.வின் செல்வாக்கை அவரால் அசைக்க முடியவில்லை.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகுதான் மகளிருக்குக் கட்டணமில்லாப் பயண விரிவாக்கம், தாய்மாமன் தங்கமோதிரம், அண்ணன் சீர் போன்ற திட்டங்களை அவர் அறிவித்தார். இதுவே தேர்தல் நடத்தை விதிகளை மீறியதுதான். இப்படி பல்வேறு விதிமீறல்களைச் செய்தே இந்த முடிவை த.வெ.க. பெற்றுள்ளது.

என்னைப் பொறுத்தவரையில் துரோகத்துக்கு இடைக்கால வெற்றி கிடைத்துள்ளது. அதே நேரத்தில் பொய் பிம்ப அரசியலின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது!

இதில் மிகவும் முக்கியமானது, துர்நாற்றமெடுக்கும் துரோக சக்தி யான த.வெ.க.வுக்கு எதிராகக் களம் கண்ட அனைத்துக் கட்சிகள் பெற்ற வாக்குகளும் ஆட்சிக்கு எதி ரான வாக்குகள் என்பதுதான்! அவைதான் பெரும்பான்மை! இந்த அரசு மீண்டும் பெரும்பான்மை மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

குதிரை பேரம், எம்.எல்.ஏ. ஷாப் பிங், பழிவாங்கும் நடவடிக்கை கள், அருவருப்பான பேச்சுகள், அசிங்கமான சைகைகள், ரீல்ஸ் எடுப்பதில் மட்டும் கவனம் ஆகிய வற்றைத் தவிர்த்துவிட்டு இனியாவது மக்கள் பணிகளில் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

உடன்பிறப்புகளுக்கு நன்றியும் பாராட்டுகளும்!

தேர்தல் வெற்றி தோல்வி களைப் பற்றிக் கவலைப்படாமல் கொள்கை - இலக்கு என பயணிக் கும் உடன்பிறப்புகள் அனைவருக் கும் எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கி றேன்.

களத்தில் கடும் போட்டியைக் கொடுத்து, ஆளும்கட்சியினரை அச்சத்தில் அலையவிட்ட கழக உடன்பிறப்புகளுக்கு நன்றியும் பாராட்டுகளும் தெரிவித்துக் கொள் கிறேன்.

தோளோடு தோள் நின்று உழைத்த அனைத்துக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள், நிர்வாகி கள், தோழர்களுக்கும் எனது நெஞ் சார்ந்த நன்றிகள்!

சினிமா கவர்ச்சியை மூலதன மாகக் கொண்டு, அதன் மூலமாக மக்களை ஏமாற்றி அதிகாரத்துக்கு வந்து கார்ப்பரேட் மாஃபியாக்கள் சிலரின் கைப்பாவையாக ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் விஜய் யின் முகத்திரையைக் கிழிக்கும் பரப்புரைப் பயணத்தை நாம் தினம்தோறும் தொய்வின்றித் தொடர்வோம். தமிழ்நாட்டுக்கு விரோதமான சக்திகளின் பிடியில் அவர் சிக்கி இருக்கிறார். அதை மக் கள் விரைவில் முழுமையாக உணர்வார்கள்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் முறைகேடுகளை கண்டித்து போராட்டம் நடத்த டெல்லி செல்லும்

இளைஞர்களின் பயணத்தை தடுக்க நினைப்பதா?

ஒன்றிய அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக். 11-

ஒன்றிய அரசு, தேர்தல் முறைகேடுகளை கண் டித்து போராட்டம் நடத்த டெல்லி செல்லும் இளை ஞர்களின் பயணத்தை தடுக்கும் நடவடிக்கைக ளுக்கு எதிர்க்கட்சித் தலை வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு

தேர்தல் முறைகேடு களைக் கண்டித்தும், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரியும் போராட்டம் நடத்துவதற்காக நாட்டின் தலைநகர் டெல்லியை நோக்கிச் செல்லும் இளை ஞர்களின் பயணத்தைத் தடுக்க ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் நட வடிக்கைகளை வன்மை யாகக் கண்டிக்கிறேன்.

முதலில், டெல்லியில் மெட்ரோ ரயில் நிலையங் கள் மூடப்பட்டன. இரண் டாவதாக, டெல்லிக்குச் செல்லும் ரயில்கள் ரத்து செய்யப்பட்டன. இறுதி யாக, 24 மணி நேரத் திற்கு இணையச் சேவை களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

நாடு முழுவதும் மாண வர் இயக்கத்தினர், இளை ஞர் தலைவர்கள் மற்றும் அரசியல் அமைப்பாளர் கள் பெருமளவில் கைது



செய்யப்படுவதாக செய்தி கள் வெளியாகி வரு கின்றன.

நாம் மீண்டும் ஓர் அவ சரநிலைக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கி றோமா?

தேர்தல் முறைகேடு களுக்கு எதிராகக் குரல் எழுப்ப நமது இளைஞர் களுக்கு உரிமை இல் லையா?

நமது ஜனநாயகத் தைக் காப்பாற்றுவதற்கா கத் துணிச்சலுடன் குரல் எழுப்பி வரும் இந்தியா வின் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் எங்க ளது முழுமையான ஆதர வைத் தெரிவித்துக் கொள் கிறோம்.

மிரட்டல்கள் மற்றும் காவல்துறையின் அடக்கு முறைகள் மூலம் இளை ஞர்களின் குரலை ஒடுக்க முயற்சிப்பதற்குப் பதிலாக, நாட்டின் இளைஞர்களின் குரலுக்கு ஒன்றிய அரசு செவிசாய்க்க வேண்டும் என்று வலியுறுத்துகி றேன்.

இவ்வாறு அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தூய்மைப் பணியாளர்கள் வேலை நிறுத்தம் எதிரொலி!

கடும் சுகாதாரச் சீர்கேட்டால் பரிதவிக்கும் மதுரை!

மதுரை. அக். 11 –

மதுரை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் 3வது நாளாக நேற்றும் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்ததால், நகரின் தெருக்க ளில் குப்பைகள் மலைபோல் தேங்கியது.

ரூ.2,400 கோடி மதிப்பிலான பாதாளச் சாக்க டைத் திட்டத்தில் தனியார் பங்களிப்பை கைவிட்டு, பணிகளை மதுரை மாநகராட் சியே மேற்கொள்ள வலியுறுத்தி, அக்.5ல் மாநகராட்சி மைய அலு வலகத்தை முற்றுகையிட்டு தூய் மைப் பணியாளர்கள் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

இதைத்தொடர்ந்து அன்று முதல் தொடர் வேலை நிறுத்தம் துவக்கி யுள்ளனர். 3வது நாளாக நேற்றும் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்தது.

தூய்மைப் பணியாளர்கள் அந்தந்த வார்டு அலுவலகங்க ளுக்கு சென்றுகையெழுத்து இட்டு, வேலையை புறக்கணித்து, வீடுகளுக்குத் திரும்பினர். இத னால் நகரெங்கும் மலைபோல் குப் பைகள் தேங்கி, சுகாதாரச் சீர்கேட்டில் நகரமே பரிதவித்து வருகிறது.

இதனிடையே, நேற்று முன்தி னம் தொழிற்சங்க நிர்வாகிகள் பாலசுப்ர மணியன், அம்சராஜ், போஸ் தலைமையில் 9 பேர் மற்றும் மதுரை மாநகராட்சி அதி காரிகள் சென்னை சென்று நக ராட்சி நிர்வாக இயக்குநர் தலை மையிலான பேச்சு வார்த்தையில் பங்கேற்றனர்.

இதில் சில கோரிக்கைக ளுக்கு இசைவு தரப்பட்டபோதும், முழுமை யான முடிவை அறிவிக் கும் வகையில் மதுரை மாநக ராட்சி கமிஷனர் கவ்ரவ்குமார் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிறகே வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுவது குறித்து முடிவு அறிவிக் கப்படும் என தொழிற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று போலவே இன்றும் கையெழுத்திட்டு பணிக்கு செல்லாமல், மதுரை மாநகராட்சி அலுவலகத்தில் தொழிலாளர்கள் திரண்டு வரவும். மாநகராட்சி கமி ஷனருடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவு தெரிந்த பிறகு வாபஸ் குறித்த அறிவிப்பு வெளி யிடப்படும் எனவும் தொழிற்சங் கத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது கூட்டமைப்பு ஒருங்கி ணைப்பாளர் பாலசுப்ரமணியன் கூறும் போது,

'வேலை நிறுத்தத்தை இது வரை வாபஸ் பெறவில்லை. சென்னையில் நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் நடத்திய பேச்சு வார்த்தையில் சில முடிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குப்பை மேலாண்மையில் தனியார் நிறுவன ஒப்பந்த கால அளவு முடிவடைவதால், குற்றச் சாட்டிற்கு ஆளான அந்நிறுவனம் தொடர அனுமதிக்க மாட்டோம் உள்ளிட்ட பல உறுதிகள் தரப்பட் டது.

எனினும் மதுரை மாநகராட்சி கமிஷனர் கவ்ரவ்குமாருடன் சில கோரிக்கைகளுக்கான முடிவுகள் பெற்ற பிறகே போராட்டத்தை வாபஸ் பெறலாம்.

அக். 8 அன்று மதுரை மாநக ராட்சிமைய அலுவலகத்திற்கு தொழிலாளர்கள் திரண்டு வரவும், தொழிற்சங்கத்தினர் பேச்சு வார்த்தை நடத்தி முடிவு அறி வித்த பிறகு பணிக்கு திரும்பலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

நினைவிலே என்றென்றும் நிலைப்பவர் மு.வ.

பேரறிஞர் அண்ணா பெரிதாகப் போற்றிய
ஓரறிஞர்;பெரியாரை
உளங்கொண்டு மதித்தவர்!
சீர்திருத்தப் பூம்புகார்
திரைப்படம் பாராட்டி
ஊர்ஒப்பக் கலைஞரை
உயர்த்தியே புகழ்ந்தவர்
ஈரெழுத்து மு.வ.எனும்
இன்றமிழ்ப் பேராசிரியர்!

வேர்போல மறைந்திருந்தும்
வேதாந்தம் சமற்கிருதம்
நேராக மறுத்தவர்;
நெருப்பிந்தித் திணிப்பெதிர்ப்புப்
போராக மாறுகையில்
போற்றிவந்த பத்மஸ்ரீ
சீரான விருதினைத்
திருப்பியவர் ஏற்காமல்;
ஊராள்வோர் அடக்குமுறை
ஒருதுளியும் ஒப்பாமல்!

உலகமெலாம் புகழ்பெற்ற
ஒப்பற்ற தமிழறிஞர்;
இலக்கியம் பலபடைத்த
ஈடற்ற கருத்தறிஞர்;
பலகருத்தால் இளைஞர்களைப்
பண்படுத்த முயன்றவர்;
நிலவாகத் தெரிந்தாலும்
நீள்கதிராய் ஒளிர்ந்தவர்
விலக்குவன விலக்கியே
விளக்கங்கள் தந்தவர்!

கலக்கங்கள் குழப்பங்கள்
கண்மூடிப் பழக்கங்கள்
இலக்கில்லா மயக்கங்கள்
எப்போதும் சீற்றங்கள்
புலராத எண்ணங்கள்
பொழுதெலாம் கள்ளங்கள்
பலவற்றால் மனங்கெட்டுப்
பாழாகப் போகாமல்
அலைபோல அலையாமல்
ஆரவாரம் செய்யாமல்
நிலைகெட்டுத் திரியாமல்
நீர்மையுடன் ஒழுக்கமாய்
மலைபோல உயர்வதற்கு
மனிதராய் வாழ்வதற்கு
விலையிலா மணிகளாய்
விழுமியங்கள் உரைத்தவர்
தலையான அறவழியே
சரியெனச் சாற்றியவர்!

ஈரெழுத்து முவ எனில்
இலக்கிய உலகமன்றி
ஓரெழுத்துக் கற்றோரும்
உளமாரப் போற்றிடப்
பேரெடுத்து நின்றவர்
பிறருள்ளம் வென்றவர்!

காரெடுத்த மழைபோலக்
காற்றெடுத்த ஒலிபோலத்
தேரெடுத்த கவின்போலத்
திகழ்காலை விடியல்போல்
நீரெடுத்த ஆறுபோல்
நெடுந்தெளிவும் எளிமையுமாய்ப்
போரெடுத்து மொழியாமல்
பொருள்விளங்கப் புகன்றவர்!



எண்பது நன்னூல்கள்
இயற்றியவர்;ஒவ்வொன்றும்
நண்பகல்போல் தெளிவாக
நற்கருத்து நல்குவது!
வெண்மதிபோல் தண்மையாய்
வெங்கதிர்போல் செம்மையாய்ப்
பண்படச் செய்வது;
பயன்தர வல்லது!
மண்கெட மனங்கெட
மலிவாக எழுதியே
புண்படச் செய்பவர்கள்
புற்றீசல் போல்சாய
நுண்ணறிவால நூலறிவால்
நுவன்றிடும் பாலறிவால்
திண்ணிய கருத்தறிவால்
திகழ்பவர் மு.வ.

பேராசிரியர்
மா.செல்வராசன்

பச்சையப்பன் கல்லூரி
பழம்பெருங் கல்லூரி;
உச்சிமேல் வைத்துமிக
உயர்வாகக் கொண்டாடக்
கச்சிநகர் அண்ணா
கற்றதொரு காரணம்;
நச்சியே பயில்வதற்கு
நாடியது மு வ எனும்
மெச்சுபுகழ் ஆசிரியர்
மிளிர்ந்ததொரு காரணம்!

நல்லவராய்த் தமிழர்கள்
நாட்டிலே இருப்பதுடன்
வல்லவராய் விளங்குதல்
வேண்டுமென வரைந்தவர்;
செல்வராய் வாழ்வதினும்
செம்மையாய் வாழ்வதே
பல்வகையில் நல்வாழ்வாம்
பட்டறிவால் பனுவலால்
சொல்லியவர்;ஏழையர்
துயரங்கள் தீர்வதற்கு
நல்கியவர் தீர்வுகள்!
நன்னெறி ஒன்றுதான்
அல்வழி செல்லாமல்
அறவழி செலுத்துமெனப்
பொல்லாப்புப் புரியாமல்
புகழ்வழி சேர்க்குமென
இல்லறம் செழித்திட
ஏற்றவை செப்புமெனக்
கல்வியும் ஒழுக்கமும்
கருத்தூறும் சிந்தனையும்
வல்லமை தருமென
வாய்மையை உரைத்தவர்!

பள்ளிவரை பயின்றவர்,பின்
பலபட்டம் பெற்றவர்
அள்ளிவரும் அறிவுதான்
ஆறாகப் பெருகியவர்;
உள்ளறிவு மிக்கவர்
ஒழுக்கத்தில் தக்கவர்
தெள்ளிய உளத்தினர்
தேவையான வளத்தினர்
துள்ளிய இளமைமுதல்
தமிழுக்குத் தொண்டாற்றும்
உள்ளமே கொண்டவர்
உலகெலாம் கண்டவர்!

கல்லூரி பல்கலைக்
கழகப்பே ராசிரியர்
தொல்நகர் மதுரையின்
துணைவேந்தர்
இல்லையென ஏங்காமல்
இடையறா உழைப்பினால்
வெல்லலாம் என்றவர்
வென்றுமே நின்றவர்!

திருக்குறள் தெளிவுரை
தெரிந்ததுதான் எல்லோர்க்கும்;
ஒருகோடி இவர்உரை
விற்றதெனும் உண்மைதான்
பெருந்திறனைக் காட்டிடும்
பெரும்புலமை நாட்டிடும்!
பொருள்விளங்க
அவ்வுரையைப்
பொழிந்தவர் மு . வ .தான்
இருக்கின்ற வீடெல்லாம்
இலகுமந்த எளியவுரை!

கடிதங்கள் நாடகங்கள்
கட்டுரைகள் சிறுகதைகள்
விடியலாய்ப் புதினங்கள்
வெற்றியர் வரலாறு
முடியான இலக்கிய
முற்றாய்வு;மொழியியல்
துடிப்பான அரசியல்
துலக்கிடும் வரைவுகள்
வடிவான சங்கநூல்
வளமான ஆய்வுகள்
நெடிதான இலக்கிய
வரலாறு,பயணமென
வடித்தவர்,இலக்கிய
வகைகளைப் படைத்தவர்
இடியாகத் தாக்கியது
இறப்பு அவரை அறுபதொட்டி!

ஆயிரம்பேர் தமிழறிஞர்
ஆகலாம் ஆனாலும்
ஞாயிறுபோல் இவர்ஒருவர்
நற்றமிழாய் ஒளிர்பவர்
மாயினும் இவரென்றும்
மறையாமல் வாழ்பவர்
தாயினும் பரிந்தவர்
தகைமையே புரிந்தவர்
போயினும் உலகுவிட்டுப்
புகழென்றும் போவதில்லை
தூயவர் தமிழுக்குத்
தொண்டுகள் செய்பவர்
வாழுவர் ஒப்பேது?
வையத்தில் முப்போது!

தபால் வாக்குகளில் தி.மு.க.வுக்கு அதிகம் பதிவு!

மதுராந்தகம் - தாராபுரம் இடைத்தேர்தல் முடிவுகள்!

தாராபுரம், அக். 11 –

தாராபுரம் மற்றும் மதுராந்தகம் இடைத்தேர்தல் முடிவுகள் அறி விக்கப்பட்டுள்ளன.

பொதுத்தேர்தலில் இந்த 2 தொகுதிகளிலும் அ.தி.மு.க. வெற்றி பெற்றிருந்த நிலையில், தற்போது தி.மு.க. இரண்டாமிடத் திற்கு முன்னேறி அ.தி.மு.க.வை மூன்றாமிடத்திற்கு தள்ளியுள்ளது.

அதன்படி தி.மு.க. வேட்பாளர் சுகன்யா 56,757, த.வெ.க. வேட்பாளர் சத்யபாமா 66,586, அ.தி.மு.க. வேட்பாளர் பானுமதி 44,874 வாக்குகளை பெற்றுள்ள னர்.

மதுராந்தகம் தொகுதியில் மொத்தம் 1,84,423 வாக்குகள் பதிவான நிலையில் மாலை நிலவ ரப்படி, தி.மு.க. வேட்பாளர் இ.பரந் தாமன் 54,008 வாக்குகளை பெற்றுள்ளார். த.வெ.க. வேட்பா ளர் மரகதம் குமரவேல் 74,048 வாக்குகளை பெற்றுள்ளார். அ.தி.மு.க. வேட்பாளர் கணிதா சம்பத் 47,450 வாக்குகளையும் பெற்றுள்ளார்.

இரு தொகுதி தபால் வாக்குகள் எண்ணப்பட்டதில் தி.மு.க. அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது.

த.வெ.க. கூட்டணி பலத்துடன் போட்டியிட்டு குறைந்த வாக்கு களை பெற்று வெற்றி பெற்றுள் ளது. ஆனால் தி.மு.க.வுடன் தனித்து போட்டி அதிக வாக்கு களை பெற்றுள்ளது அரசியல் அரங்கல் கவனத்தில் ஈர்த் துள்ளது.

புதுவை - தட்டாஞ்சாவடி தொகு திக்கு நடைபெற்ற இடைத்தேர்த லில் த.வெ.க. ஆதரவு பெற்ற காங் கிரஸ் தோல்வியடைந்து என். ஆர். காங்கிரஸ் அதிக வாக்கு வித் தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.